


# வள்ளலார் 200

## குறள் தேனீப் போட்டி

# குறள் தேனீப் போட்டி பிரிவுகள்

| மாணவர்கள் தங்கள் பிரிவுக்குள் உள்ள மற்ற மாணவர்களுடன் தான் போட்டியிடுவார்கள் | |
|---|---|
| அரும்பு | மழலை நிலை மாணவர்கள் (Pre-k students) |
| மொக்கு | அடிப்படை மற்றும் வகுப்பு 1 (நிலை 1) மாணவர்கள் (Kindergarten and Grade 1 Students) |
| மொட்டு | உயர் அடிப்படை நிலை (Advanced KG), வகுப்பு/நிலை 2 மாணவர்கள் (Advanced KG and Grade 2 students) |
| மலர் | வகுப்பு 3, 4,5 மாணவர்கள் (Grade 3, 4, 5 Students) |
| பூ | வகுப்பு 6, 7, 8 மாணவர்கள் (Grade 6, 7, 8 Students) |

# குறள் தேனீப் போட்டி நடைமுறை

| | |
|---|---|
| அரும்பு/மொக்கு/மொட்டு | **குறள்களை வரிசையாகக் கூறுதல்**<br>மாணவர்கள் குறள்களை வரிசையாகக் கூற வேண்டும் *<br>** தாங்கள் படித்த குறள்களின் பட்டியலை, ஒப்பிக்கும் வரிசையை, மாணவர்கள் நடுவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்* |
| மலர் மற்றும் பூ பிரிவு | **குறள்களை வரிசையாகக் கூறுதல்**<br>மாணவர்கள் குறள்களை வரிசையாகக் கூற வேண்டும் *<br>• *தாங்கள் படித்த குறள்களின் பட்டியலை, ஒப்பிக்கும் வரிசையை, மாணவர்கள் நடுவர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்*<br><br>**இறுதிச் சுற்றில், கூடுதலாக கீழே கொடுக்கப்பட்டுள்ள பிரிவுகள் சார்ந்தும் போட்டி நடைபெறும். பட்டியலில் உள்ள ஐம்பது குறள்களில் இருந்து இவை கேட்கப்படும்.**<br><br>தொடக்கச் சொல்<br>நடுவர்கள் குறளின் தொடக்க சொல்லைக் கூற, மாணவர்கள் குறள் கூறுதல்.<br>அதிகாரம் - குறள்<br>நடுவர்கள் ஒரு குறளின் அதிகாரத்தைச் சொல்ல, மாணவர்கள் இந்தப் பட்டியலில் உள்ள அந்த அதிகாரம் சார்ந்த குறள்களைக் கூறுதல்<br><br>குறள் - பொருள்<br>குறளின் பொருளைச் சார்ந்து குறளைக் கூறுதல் (குறளுக்கு பொருள், பொருளுக்கு குறள்)<br>குறளின் இறுதிச் சொல்<br>சமநிலையில் போட்டியாளர்கள் இருந்தால் குறளின் இறுதி சொல்லைக் கூறி குறளைக் கூற சொல்லுதல். |

# குறள் தேனீப் போட்டி நடைமுறை

**முக்கியக் குறிப்பு**

- **இந்தப் போட்டி திருக்குறள் படிப்பதை ஊக்குவிக்கவே நடைபெறுகிறது. எனவே ஒரு மாணவர் எத்தனை குறள்களைப் படிக்க வேண்டும் என்ற எண்ணிக்கை வரையறை இல்லை.**

- **இந்தப் பட்டியலில் உள்ள ஐம்பது (50) திருக்குறள்களே போட்டிக்கான திருக்குறள்கள். இதற்கு வெளியே உள்ள குறள்கள் போட்டிக்கான திருக்குறள்கள் அல்ல.**

- **இந்த ஐம்பது குறள்களில் இருந்து ஒருவர் தங்களுக்கு ஏற்ப எத்தனை குறள்களை வேண்டுமானாலும் படிக்கலாம். எண்ணிக்கை சார்ந்த வரையறை இல்லை.**

**போட்டி நடைமுறை**

- ஒவ்வொரு பிரிவிற்கும் உள்ள போட்டி நடைமுறை பக்கம் 3ல் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை கவனமாகப் பார்க்கவும்.
- ஒரு மாணவர் சரியாக ஒப்பிக்கும் ஒவ்வொரு குறளுக்கும் ஒரு மதிப்பெண் வழங்கப்படும்
- வரிசையாக ஒப்பிக்கும் சுற்றில், முதல் சுற்றில் நேர வரையறை இல்லை. தாங்கள் கற்ற அனைத்து குறள்களையும் வரிசையாக ஒப்பிக்கலாம். இறுதிச் சுற்றில் அதிகபட்சம் ஏழு நிமிடங்கள் வழங்கப்படும்.
- பிற சுற்றுகளுக்கு (அதிகாரம் - குறள், குறள் - பொருள், குறளின் இறுதி சொல்) ஒரு குறளுக்கு 30 வினாடிகள் கொடுக்கப்படும்.
- சரியாகக் கூறுதல் (Correctness), சரளமாகக் கூறுதல் ( Fluency), சரியான உச்சரிப்பு (Pronunciation) ஆகியவை சார்ந்தும் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

- **முதல் சுற்று : டிசம்பர் 3 மற்றும் 4 தேதிகளில் இணையம் மூலமாக நடைபெறும்**
- **இறுதிச் சுற்று : டிசம்பர் 10 ஆம் தேதி விழா அரங்கில் நடைபெறும்**

# குறள்களின் பட்டியல்

| 1 | அறத்துப்பால் | அதிகாரம் : கடவுள் வாழ்த்து |
|---|---|---|
| அகர முதல எழுத்தெல்லாம் ஆதி<br>பகவன் முதற்றே உலகு | | |
| எழுத்துக்கள் எல்லாம் அகரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அதுபோல் உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. | | |

| 2 | பொருட்பால் | அதிகாரம் : கல்வி |
|---|---|---|
| கற்க கசடறக் கற்பவை கற்றபின்<br>நிற்க அதற்குத் தக. | | |
| கல்விக் கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும், அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும். | | |

| 3 | பொருட்பால் | அதிகாரம் : உழவு |
|---|---|---|
| உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்<br>தொழுதுண்டு பின்செல் பவர். | | |
| உழுதுண்டு வாழ்பவர்களே உயர்ந்த வாழ்வினர்; ஏனென்றால், மற்றவர்கள் அவர்களைத் தொழுதுண்டு வாழ வேண்டியிருக்கிறது. | | |

| 4 | அறத்துப்பால் | அதிகாரம் : அன்புடைமை |
|---|---|---|
| அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்<br>என்பும் உரியர் பிறர்க்கு. | | |
| அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடம்மையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர். | | |

| 5 | அறத்துப்பால் | அதிகாரம் : செய்ந்நன்றி அறிதல் |
|---|---|---|

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதல்ல; அவர் தீமை செய்திருந்தால் அதை மட்டும் அக்கணமே மறந்து விடுவது நல்லது.

| 6 | அறத்துப்பால் | அதிகாரம் : அடக்கமுடைமை |
|---|---|---|

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

நெருப்பு சுட்ட புண்கூட ஆறி விடும்; ஆனால் வெறுப்புக் கொண்டு திட்டிய சொற்கள் விளைத்த துன்பம் ஆறவே ஆறாது.

| 7 | அறத்துப்பால் | அதிகாரம் : ஒழுக்கமுடைமை |
|---|---|---|

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

ஒருவர்க்கு உயர்வு தரக் கூடியது ஒழுக்கம் என்பதால், அந்த ஒழுக்கமே உயிரைவிட மேலானதாகப் போற்றப்படுகிறது.

| 8 | அறத்துப்பால் | அதிகாரம் : புகழ் |
|---|---|---|

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

எந்தத் துறையில் ஈடுபட்டாலும் அதில் புகழுடன் விளங்கவேண்டும்; இயலாதவர்கள் அந்தத் துறையில் ஈ.டுபடாமல் இருப்பதே நல்லது.

| 9 | அறத்துப்பால் | அதிகாரம் : வாய்மை |
| --- | --- | --- |

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

மனச்சாட்சிக்கு எதிராகப் பொய் சொல்லக்கூடாது; அப்படிச் சொன்னால், சொன்னவரின் மனமே அவரைத் தண்டிக்கும்.

| 10 | அறத்துப்பால் | அதிகாரம் : இன்னாசெய்யாமை |
| --- | --- | --- |

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிப்பதற்குச் சரியான வழி, அவர் வெட்கித் தலைகுனியும்படியாக அவருக்கு நன்மை செய்வதுதான்.

| 11 | அறத்துப்பால் | அதிகாரம் : வான்சிறப்பு |
| --- | --- | --- |

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைத்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பத மழையாகும்.

| 12 | பொருட்பால் | அதிகாரம் : கல்வி |
| --- | --- | --- |

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழம் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

| 13 | பொருட்பால் | அதிகாரம் : கேள்வி |
| --- | --- | --- |

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

செழுமையான கருத்துகளைச் செவிவழியாகப் பெறும் செல்வமே எல்லாச் செல்வங்களுக்கும் தலையாய செல்வமாகும்.

| 14 | பொருட்பால் | அதிகாரம் : அறிவுடைமை |
| --- | --- | --- |

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருளை யார் யார் இடம் கேட்டாலும் (கேட்டவாறே கொள்ளாமல்) அப் பொருளின் மெய்யானப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

| 15 | பொருட்பால் | அதிகாரம் : வலியறிதல் |
|---|---|---|

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.

தன் சொத்தின் மதிப்பை அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனின் வாழ்க்கை, இருப்பது போல் காட்சி தந்து இல்லாமல் அழிந்துவிடும்.

| 16 | பொருட்பால் | அதிகாரம் : தெரிந்துவினையாடல் |
|---|---|---|

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

இந்தச் செயலை இக்கருவியால் இன்னவன் செய்துமுடிப்பான் என்று ஆராய்ந்த பிறகே அத் தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

| 17 | பொருட்பால் | அதிகாரம் : ஆள்வினையுடைமை |
|---|---|---|

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

கடவுளே என்று கூவி அழைப்பதால் நடக்காத காரியம் ஒருவர் முயற்சியுடன் உழைக்கும் போது அந்த உழைப்புக் கேற்ற வெற்றியைத் தரும்.

| 18 | பொருட்பால் | அதிகாரம் : நட்பு |
|---|---|---|

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

இன்முகம் காட்டுவது மட்டும் நட்புக்கு அடையாளமல்ல; இதயமார நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

| 19 | அறத்துப்பால் | அதிகாரம் : மக்கட்பேறு |
|---|---|---|

குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.

தங்கள் குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்கள்தான் குழலோசை, யாழோசை ஆகிய இரண்டும் இனிமையானவை என்று கூறுவார்கள்.

| 20 | அறத்துப்பால் | அதிகாரம் : அறன்வலியுறுத்தல் |
|---|---|---|

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.

மனம் தூய்மையாக இருப்பதே அறம்; மற்றவை ஆரவாரத்தைத் தவிர வேறொன்றுமில்லை.

| 21 | அறத்துப்பால் | அதிகாரம் : ஒழுக்கமுடைமை |
|---|---|---|

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

நல்லொழுக்கம், வாழ்க்கையில் நன்மைக்கு வித்தாக அமையும். தீயொழுக்கம், தீராத துன்பம் தரும்.

| 22 | அறத்துப்பால் | அதிகாரம் : செய்ந்நன்றி அறிதல் |
|---|---|---|

காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அது உலகத்தைவிடப் பெரிதாக மதிக்கப்படும்.

| 23 | அறத்துப்பால் | அதிகாரம் : புகழ் |
|---|---|---|

வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

பழி உண்டாகாமல் வாழ்வதே வாழ்க்கை எனப்படும், புகழ் இல்லாதவர் வாழ்வதும் வாழாததும் ஒன்றுதான்.

| 24 | அறத்துப்பால் | அதிகாரம் : அறன்வலியுறுத்தல் |
|---|---|---|

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

பொறாமை, பேராசை, பொங்கும் கோபம், புண்படுத்தும் சொல் ஆகிய இந்த நான்கும் அறவழிக்குப் பொருந்தாதவைகளாகும்.

| 25 | அறத்துப்பால் | அதிகாரம் : கடவுள் வாழ்த்து |
|---|---|---|

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

தன்னைவிட அறிவில் மூத்த பெருந்தகையாளரின் முன்னே வணங்கி நிற்கும் பண்பு இல்லாவிடில் என்னதான் ஒருவர் கற்றிருந்தாலும் அதனால் என்ன பயன்? ஒன்றுமில்லை.

| 26 | அறத்துப்பால் | அதிகாரம் : மக்கட்பேறு |
|---|---|---|

தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

தந்தை தன் மக்களுக்குச் செய்யவேண்டிய நல்லுதவி அவர்களை அறிஞர்கள் அவையில் புகழுடன் விளங்குமாறு ஆக்குதலே ஆகும்.

| 27 | அறத்துப்பால் | அதிகாரம் : அடக்கமுடைமை |
|---|---|---|

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவையாவது அடக்கிக் காத்திட வேண்டும். இல்லையேல் அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகி விடும்.

| 28 | அறத்துப்பால் | அதிகாரம் : செய்ந்நன்றி அறிதல் |
|---|---|---|

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

எந்த அறத்தை மறந்தார்க்கும் வாழ்வு உண்டு; ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்தார்க்கு வாழ்வில்லை.

| 29 | பொருட்பால் | அதிகாரம் : வினைத்திட்பம் |
| --- | --- | --- |
| சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்<br>சொல்லிய வண்ணம் செயல். | | |
| சொல்லுவது எல்லோருக்கும் எளிது; சொல்லியதைச் செய்து முடிப்பதுதான் கடினம். | | |

| 30 | பொருட்பால் | அதிகாரம் : பெருமை |
| --- | --- | --- |
| பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா<br>செய்தொழில் வேற்றுமை யான். | | |
| பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும். | | |

| 31 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>அறன் வலியுறுத்தல் |
|---|---|---|

மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற

ஒருவர் மனது அளவில் தூய்மையாக இருப்பது தான்
சிறந்த அறச்செயல் ஆகும்.

| 32 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>அன்புடைமை |
|---|---|---|

அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்

ஒருவர் மீது உள்ள அன்பை மறைத்து வைக்க முடியாது. நம் கண்களில் வழியும் கண்ணீர்
நம் அன்பை வெளிப்படுத்தி விடும்.

| 33 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>அன்புடைமை |
|---|---|---|

என்பில் அதனை வெயில் போலக் காயுமே
அன்பில் அதனை அறம்

எலும்பு இல்லாத உடலை வெயில் சுடுவது போல், அன்பு இல்லாதவர்களை அறம் சுடும்

| 34 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>விருந்தோம்பல் |
|---|---|---|

மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

முகந்து பார்த்தால் அனிச்சப்பூ வாடிவிடும். முகம் வேறுபட்டுப் பார்த்தால் விருந்தினர்
மனம் வருந்திவிடும்

| 35 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>பொறையுடைமை |
|---|---|---|

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை

நிலம் தன் மேல் நின்று குழி பறிப்பவரைப் பொறுத்துக் கொள்வதுபோல், ஒருவர் தன்னைத் தவறாகப் பேசுபவரைப் பொறுப்பது நல்லது.

| 36 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>பயனில சொல்லாமை |
|---|---|---|

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொலல்

அரிய பயனைத் தரும் என்றாலும், பிறருக்கு நன்மையோ,பயனோ இல்லாத சொற்களை அறிவு உடையவர் பேசமாட்டார்.

| 37 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>பயனில சொல்லாமை |
|---|---|---|

சொல்லுக சொல்லில் பயன் உடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச்சொல்.

பயன்தரும் சொற்களை மட்டுமே பேசவேண்டும்.
பயன் தராத சொற்களைப் பேசக்கூடாது.

| 38 | அறத்துப்பால் | அதிகாரம்:<br>புகழ் |
|---|---|---|

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

பிறருக்கு உதவுதல், புகழ் பெற்று வாழ்தல் இரண்டும்
தவிர மனிதருக்கு வேறு பெருமை இல்லை.

| 39 | அறத்துப்பால் | அதிகாரம்: புலால்மறுத்தல் |
|---|---|---|
| கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி<br>எல்லா உயிரும் தொழும். | | |
| பிற உயிரைக் கொல்லாதவரை, உயிர்களைக் கொன்று உண்ணாதவரை இந்த மண்ணில் வாழும் எல்லா உயிர்களும் இரு கை கூப்பி வணங்கும். | | |

| 40 | அறத்துப்பால் | அதிகாரம்: வெகுளாமை |
|---|---|---|
| மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய<br>பிறத்தல் அதனால் வரும். | | |
| மற்றவர்கள் மேல் உள்ள கோபத்தை மறந்து விட வேண்டும். மறக்காவிட்டால் அந்தக் கோபமே தீமை அளித்துவிடும். | | |

| 41 | அறத்துப்பால் | அதிகாரம்: கொல்லாமை |
|---|---|---|
| பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர்<br>தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. | | |
| உலகத்தில் உள்ள நல்ல செயல்களில் எல்லாம் சிறந்தது, தன்னிடம் இருக்கும் பொருளை அனைவருக்கும் பகிர்ந்து வாழ்வது ஆகும். | | |

| 42 | அறத்துப்பால் | அதிகாரம்: கொல்லாமை |
|---|---|---|
| தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது<br>இன்னுயிர் நீக்கும் வினை. | | |
| தன்னுடைய உயிர் போகும் நிலை வந்தாலும், இன்னொரு உயிரைக் கொல்லும் செயலைச் செய்யக் கூடாது. | | |

| 43 | பொருட்பால் | அதிகாரம்: கல்வி |
|---|---|---|
| கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு<br>மாடு அல்ல மற்றயவை. | | |
| ஒருவருக்கு எப்பொழுதும் அழிவும், இழிவும் தராத செல்வம் கல்வி ஆகும். மற்றவை எதுவும் செல்வங்கள் அல்ல. | | |

| 44 | பொருட்பால் | அதிகாரம்: கேள்வி |
|---|---|---|
| செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது<br>வயிற்றுக்கும் ஈயப்படும் | | |
| காதினால் கேட்டுப் பயன் பெற எதுவும் இல்லாதபோது, சிறிது வயிற்றுப்பசிக்கும் உணவு தரப்படும். | | |

| 45 | பொருட்பால் | அதிகாரம்: தெரிந்து செயல்வகை |
|---|---|---|
| எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்<br>எண்ணுவம் என்பது இழுக்கு. | | |
| ஒரு செயலைச் செய்யும் முன் தெளிவாக யோசித்து முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்தபின், முடியுமா? என்று நினைப்பது தவறு. | | |

| 46 | அறத்துப்பால் | அதிகாரம்: ஈகை |
|---|---|---|
| பாத்தூண் மரீஇ இவனைப் பசி என்னும்<br>தீப்பிணி தீண்டல் அரிது. | | |
| தன்னிடம் இருக்கும் உணவினை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்பவர்களுக்குப் பசி என்பதே இருக்காது. | | |

| 47 | பொருட்பால் | அதிகாரம்: கேள்வி |
|---|---|---|
| எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்<br>ஆன்ற பெருமை தரும். | | |
| எவ்வளவு சிறிதேயாயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும்; கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும். | | |

| 48 | பொருட்பால் | அதிகாரம்: சுற்றந்தழால் |
|---|---|---|
| சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம் தான்<br>பெற்றத்தால் பெற்ற பயன். | | |
| தன்னைச் சுற்றி உள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உதவி அன்புடன் வாழ்வதுதான் நிறைய செல்வங்களைப் பெற்றதற்குப் பெருமை ஆகும். | | |

| 49 | பொருட்பால் | அதிகாரம்: பொச்சாவாமை |
|---|---|---|
| உள்ளியது எய்தல் எளிது-மன் மற்றும் தான்<br>உள்ளியது உள்ள பெறின் | | |
| நாம் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிற செயலை உறுதியோடு நினைத்துச் செய்தால் எளிதாக வெற்றி பெறலாம். | | |

| 50 | பொருட்பால் | அதிகாரம்: ஊக்கமுடைமை |
|---|---|---|
| உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் மற்று அது<br>தள்ளினும் தள்ளாமை நீர்த்து | | |
| நாம் அடைய நினைப்பது உயர்ந்த செயலாக இருக்கவேண்டும். அதைப்பெற முடியாவிட்டாலும் தோல்வியாக ஆகாது. | | |